

வளவனூர், பேரூர் 10 வது வார்டு பொருளாளர் .கிருஷ்ணமூர்த்தி இல்ல திருமண வரவேற்பு விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் சம்பத், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் செந்தில் குமார், நகர பொருளாளர் என்.என்.இளங்கோ, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, துணை தலைவர் அசோக் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 28.08.2024 அன்று பொது நிதி 20232024 திட்டத்தின் கீழ் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்டம் - புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.151 இலட்சம் மதிப்பில் முடிவுற்ற 9 புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து - நல உதவிகள் வழங்கினார்!

திருவண்ணாமலை, ஆக.31-

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 28.08.2024 அன்று பொது நிதி 2023 24 திட்டத்தின் கீழ் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்புதியதாக கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவு மற்றும்இறையூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கட்டிடம் கட்டுதல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 12.51 இலட்சம் மதிப்பீட்டில் கல்லரைப்பாடி ஊராட்சி ஆதிதிராவிடர் காலனி பகுதியில் உணவு தானிய கிடங்கு கட்டிடம் கட்டுதல், ரூபாய்; 42.65 இலட்சம் மதிப்பீட்டில் வடமாத்தூர் ஊராட்சியில் கிராமச் செயலக கட்டிடம் கட்டுதல் மற்றும் ரூபாய் 23.57 இலட்சம் மதிப்பீட்டில் ஜப்திகாரியந்தல் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கட்டுதல்,ரூபாய் 16.65 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட கனிம வளங்கள் திட்டத்தின் கீழ் ஜப்திகாரியந்தல் ஊராட்சி ஆதிதிராவிடர் காலணியில் மேநீர் தேக்கத்தொட்டி கட்டுதல், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் மஷார் ஊராட்சியில் பல்நோக்கு சேவை மைய கட்டிடம் கட்டுதல்,ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் முத்தனூர் ஊராட்சியில் பயணியர் நிழற்குடை அமைத்தல்,ரூபாய் 16 இலட்சம் மதிப்பீட்டில் இறையூர் ஊராட்சி ராஜீவ் காந்தி நகர் 30 ஆயிரம் லிட்டர் மேல்நீர் தேக்கத் தொட்டி கட்டுதல்ஆகிய 9 திட்டப்பணிகளை ரூபாய் 151.38 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர். தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினார் சி.என்.அண்ணாதுரை, கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாநில தடகளச் சங்க துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந் ; நிகழ்ச்சியில் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது :-

ஆள் பாதி, ஆடை பாதி என்ற பழமொழி ஒன்று உண்டு. உடலுக்கு முகம் அவசியம் என்பது போல் ஒரு அரசு அலுவலகம் உள்ளே சிறப்பாக செயல்படுகிறது, நிர்வாகம் சிறப்பாக செயல்படுகிறது என்றால் கட்டிடத்திற்குநுழைவு வாயில்தான் காரணம். இந்த அற்புதமான கலைஞர் நூற்றாண்டு நினைவு வளைவு நுழைவு வாயில் 37 ஊராட்சி மன்ற தலைவர்கள், 18 ஒன்றியக்குழுத் உறுப்பினர்கள் இணைந்து கலைஞரின் நூற்றாண்டினை நினைவு கூரும் வகையில் கலை நோக்கத்துடன் இந்நுழைவு வாயில் சிறப்பாக கட்டி முடிக்க ப்பட்டிருக்கிறது.

வள்ளுவர் திருக்குறளில்

ஒல்லும்வா யெல்லாம்
வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச்
செயல்

என்ற குறளில் இயலுமிடத்தில் எல்லாம் செயலைச் செய்து முடித்தல் நல்லது. இயலாவில்லையானால் பயன்படும் இடம் நோக்கியாவது செய்ய வேண்டும் என்பது பொருள். அதேபோல் தமிழ்நாட்டில் எதுவெல்லாம் நடக்காது என இருக்கிறதோ அதையெல்லாம் நடத்திக் காட்டுகிற ஆட்சித்தான் திராவிட மாடல் ஆட்சி. மூ ன்றாண்டு களில் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. திருவண்ணா மலை மாவட்டத்தில் எட்டுத் சட்டமன்றத் தொகுதிகளில் அதிகமான அளவு பயன்பெற்ற தொகுதி என்றால் கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி. ஏனென்றால் இங்கு அதிகமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதியில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, மேம்பாலம், நெல் கொள்முதல் நிலையம், பருவதமலைக்கு படிக்கட்டுகள், கேட்டவரம்பாளையம் பிள்ளை ஊராட்சியில் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் ஒழுங்குமுறை விற்பனை கூடம்,ரூபாய் 180 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக ஏறத்தாழ 70 கிலோ மீட்டர் தொலைவில் சாலைப்பணிகள், பொதுப்பணித்துறை சார்பில் 17 கோடியே 77 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளும்,ரூபாய் 58 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக உள்ளாட்சி பணிகளும் நடைபெற்று உள்ளது.


மேலும்,புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் நமக்கு நாமே திட்டத்தின் வாயிலாக 76 இலட்சம் மதிப்பீட்டில் 16 பணிகளும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மூலமாக ரூபாய் 100 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக 1கோடியே 28 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆதிதிராவிடர் குடியிருப்பு அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூபாய் 1 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டிலும்,மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதி திட்டத்தின் கீழ் பணிகளும்,ரூபாய் 87 இலட்சம் மதிப்பீட்டில் குளம் புணரமைத்தல் பணிகளும்,ரூபாய் 9 கோடியே 33 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகளும்,ரூபாய் 2 கோடியே 56 இலட்சம் மதிப்பீட்டில் 11 புதிய பணிகளும் கிராம பஞ்சாயத்து செயலக கட்டுகிற பணியும்,ரூபாய் 11 கோடியே 43 இலட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் 18 பணிகள் என பல பணிகள் திராவிட மாடல் ஆட்சியில் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிக்கு உள் விளையாட்டு அரங்கம், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஆதமங்கலம்புதூரில் கால்நடை நிலையம் என பல்வேறு திட்டப்பணிகள் அமைக்கப்பட்டிருக்கிறது.

மேலும் திராவிட மாடல் ஆட்சியில் தான் மகளிர்களுக்கு ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை மாதந்தோறும் ரூபாய் ஆயிரம், கட்டணமில்லா விடியல் பயணம்,இல்லம் தேடி மருத்துவம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திராவிட மாடல் ஆட்சி என்றால் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பது பொருள். பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் என்ற சிறப்பான திட்டத்தை செயல்படுத்தியிருக்கிறார்கள். இதுபோன்று அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியிருக்கிறார்கள் என பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்கள்.

இன்று நடைபெற்ற விழாவில் சமூக நலத்துறை சார்பாக 2 பயனாளிகளுக்கு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தலா ரூபாய் 50 ஆயிரம் வைப்புத் தொகைக்கான ஆணைகளையும், வருவாய்த்துறை சார்பாகரூபாய் 10 இலட்சத்து 26 ஆயிரம் மதிப்பீட்டில் 57 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி உதவித்தொகைக்கான ஆணைகளையும்,ரூபாய் 4 இலட்சத்து 3200 மதிப்பீட்டில் 28 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகளையும்,ரூபாய் 1 இலட்சத்து 800 மதிப்பீட்டில் 7 பயனாளிகளுக்கு விதவை உதவித்தொகைக்கான ஆணைகளையும்,ரூபாய் 43 ஆயிரத்து 200 மதிப்பீட்டில் 3 பயனாளிக்கு கணவரால் கைவிடப்பட்டோர் உதவித்தொகைக்கான ஆணைகளையும், 125 பயனாளிகளுக்கு புதிய வீட்டுமனை பட்டா, பட்டா மாற்றம்,உட்பிரிவு மாற்றத்திற்கான ஆணைகளையும், 1 பயனாளிக்கு இருளர் சான்றிதழினையும்,2 பயனாளிக்கு சிறு குறு விவசாய சான்றிதழ்களையும்,1 பயனாளிக்கு ஒபிசி சான்றிதழினையும்,மகளிர் திட்டம் சார்பாக ரூபாய் 7 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் 18 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுத விக்கான ஆணைகள் என 244 பயனாளிகளுக்கு ரூபாய் 23 இலட்சத்து 93 ஆயிரத்து 200 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி மந்தாகினி, புதுப்பாளையம் ஒன்றியக்குழுத்தலைவர் சி.சுந்தரபாண்டியன், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான மோகனூர் சாலையில் உள்ள முல்லை நகர், கலைஞர் அறிவாலயம் இனமானப் பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம் சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பொருளாதார ரீதியாகவும் தமிழ்நாட்டை

# வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## தினகரன் நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக 31 -

தமிழ்நாட்டை பொருளாதார ரீதியாகவும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று தினகரன் நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது

திமுக என்கிற மாபெரும் இயக்கத்தின் தலைவராக பொறுப்பேற்று, வெற்றிகரமாக 6 ஆண்டுகளை நேற்று பூர்த்தி செய்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். 7ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் அரசியல் பயணம் அவ்வளவு எளிதானதல்ல. 1953, மார்ச் 1ல் பிறந்த அவர், பள்ளி பருவத்திலேயே அரசியலில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார். அந்த ஆர்வத்தில் 1968 ஆம் ஆண்டு அவர் தொடங்கியதுதான் கோபாலபுரம் இளைஞர் திமுக. இதன் எழுச்சியை கண்ட அப்போதைய திமுக தலைவர் கலைஞர், 1980 ஆம் ஆண்டு மதுரையில் நடந்த பிரமாண்ட மாநாட்டில் திமுக இளைஞரணியை தொடங்கி வைத்தார்.

1982ல் இளைஞரணியின் மாநில அமைப்பாளராக மு.க.ஸ்டாலின் நியமிக்க ப்பட்டார். பின் தனது விவேகமான செயல்பாடுகளில் 1984ல் இளைஞரணி செயலாளரானார். தனது அரசியல் பயணத்தின் அடுத்தக்கட்டமாக 1984ல் ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டார். அந்த தேர்தலில் அவர் வெற்றி பெறவில்லை. அதனால் மனம் தளராமல் கட்சிப்பணியில் தேனீயாக செயல்பட்ட அவர், அதே தொகுதியில் 1989 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று முதன்முத லாக தமிழக சட்டப்பேரவைக்குள் அடியெடுத்து வைத்தார்.

தமிழகத்தில் 1996 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சி தேர்தலில் சென்னை மாநகர மேயராக பதவி ஏற்றார். இவரது காலத்தில்தான் சென்னையானது சிங்கார சென்னையாக ஜொலித்தது. தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு திமுக ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சராக மு.க.ஸ்டாலின் நியமி க்கப்பட்டார். அமைச்சராக இவரது நிர்வாகத்திறன், சுறு சுறுப்பான செயல்பாடுகள் அனைவரையும் கவர்ந்தது. இதனையடுத்து 2009 ஆம் ஆண்டு துணை முதல்வராக பொறுப்பேற்றார். 2015ல் தமிழகமெங்கும் நமக்கு நாமே சுற்றுப்பயணம் மேற்கொண்டு திமுகவை மேலும் வலுவாக்கினார். மக்களின் குறைகளை நகரங்கள், கிராமங்களுக்கு சென்று கேட்டது, மாணவ, மாணவிகளுடனான கலந்துரையாடல் போன்றவை மக்களிடையே பாராட்டை பெற்றது.

திமுகவில் துணை பொதுச் செயலாளர், பொருளாளர் என பதவி வகித்த அவர், கலைஞர் உடல் நலம் பாதிக்கப்பட்டபோது செயல் தலைவராக பொறுப்பேற்றார். 2018, ஆக. 7ஆம் தேதி கலைஞர் காலமான பின்னர், ஆக. 28 ஆம் தேதி திமுகவின் தலைவராக பொறுப்பேற்றார். 2019 ஆம் ஆண்டு எம்பி தேர்தல் வந்தது. அந்த தேர்தலில் தேனி தொகுதி நீங்கலாக அனைத்து தொகுதிகளையும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் கைப்பற்றின. இதனைத்தொடர்ந்து நடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் திமுக அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடித்தது. இடையில் நடந்த உள்ளாட்சி தேர்தல்கள், 2024 எம்.பி. தேர்தல் என திமுகவை அடுத்தடுத்து வெற்றிகரமான கட்சியாக வழி நடத்திச் செல்கிறார் மு.க. ஸ்டாலின் கட்சி தொண்டர்கள், கூட்டணி கட்சி தலைவர்களையும் தாயுள்ளத்தோடும் அரவணைத்தும் செல்கிறார்.




தி.மு.க. தலைவராக மட்டுமா? மாநில முதல்வராக விடியல் மகளிர் கட்டணமில்லா பேருந்து திட்டம், மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், காலை உணவுத்திட்டம், இல்லம் தேடி மருத்துவம் என எண்ணற்ற அற்புத திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மேலும், ஆட்சிக்கு வந்த 3 ஆண்டுகளில் 31 லட்சம் பேருக்கு வேலை, ரூ.10 லட்சம் கோடி முதலீடுகள் என பொருளாதாரரீதியாகவும் மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறார். மாணவர் பருவத்தில் துவங்கிய அரசியல் வாழ்க்கையானது, தற்போது ஒரு பேரியக்கத்தின் தலைவராகவும், மாநிலத்தின் தலைசிறந்த முதல்வராகவும் மு.க. ஸ்டாலினை முன்னி றுத்தியுள்ளது என்பது மிகையல்ல.

இவ்வாறு தினகரன் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், தமிழகத்தில் பொதுமக்கள் தினமும் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்வதற்கு, ஊரகப் பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, திப்பிராஜபுரம் ஊராட்சி, கௌசல்யா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. முகாமில், கொருக்கை, மருதாநல்லூர், திப்பிராஜபுரம், சேஷம்பாடி, தில்லையம்பூர் மற்றும் உடையாளூர் ஆகிய 6 ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று, அந்ததந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ், மாநிலங்களவை உறுப்பினரும், தஞ்சை வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான சு.கல்யாணசுந்தரம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், துணை ஆட்சியர் விக்னேஸ்வரகுமார் இணைந்து, 62 பயனாளிகளுக்கு, வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கினார்கள். நிகழ்வில், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணை பெருந்தலைவரும், மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளருமான தி.கணேசன், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஜெ.சுதாகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நா.சிவக்குமார், ம.ஆனந்தராஜ், வட்ட வழங்கல் அலுவலர் அருள்பிரகாசம், ஒன்றிய குழு உறுப்பினர் த.பாண்டியன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கார்த்தியாயினி கரிகாலன், கி.ரவி, சா.முருகையன், ஆர்.பகவான்தாஸ், இ.செல்வி, கா.யோகலெட்சுமி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.வே. செழியன்

### ஆகஸ்ட் 31 (2022)



**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொடர்" என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**